செய்தி வெளியீடு எண் : 02 நாள் :01.10.2021

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 18-ஆம் கால்வாய் நீட்டிப்பு பாசன பகுதிகளுக்கான தண்ணீரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. என்.ராமகிருஷ்ணன் அவர்கள், திரு. கே.எஸ்.சரவணக்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் திறந்து வைத்தார்:-**

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தேனி மாவட்டம், 18-ம் கால்வாய் நீட்டிப்பு பாசன பகுதிகளுக்கான தண்ணீரை இன்று (01.10.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.ராமகிருஷ்ணன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.சரவணக்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், விவசாயிகள் பயன்பெறும் வகையில் திறந்து வைத்து, தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருங்குடிமக்களின் கோரிக்கையினை ஏற்று தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள 18-ம் கால்வாய் நீட்டிப்பு பாசன பகுதிகளுக்கான தண்ணீரை திறந்துவிட உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில், 18-ம் கால்வாய் நீட்டிப்பு பாசனப் பகுதிகளுக்கான தண்ணீர் இன்று தினம் முதல் 95 கன.அடி / வினாடி வீதம் 15 நாட்களுக்கு மொத்தம் 121 மில்லியன் கன அடி தண்ணீர் விவாயிகள் பயன்பெறும் வகையில் திறந்து விடப்பட்டுள்ளது.

18-ம் கால்வாய் நீட்டிப்பு பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறக்கப்பட்டதன் மூலம் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட தேவாரம், பொட்டிபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள நிலங்களும், போடிநாயக்கனூர் வட்டத்திற்குட்பட்ட ராசிங்கபுரம், சிலமலை, மேலசொக்கநாதபுரம், போடிநாயக்கனூர் ஆகிய கிராமங்களில் உள்ள நிலங்களும் பாசன வசதி பெறும். அதனடிப்படையில், 585 கிணறுகளின் நிலத்தடி நீர் செரிவூட்டப்படுவதன் மூலம் 3848.55 ஏக்கர் நிலங்களும், 7 குளங்களின் கீழ் உள்ள 946.16 ஏக்கர் நிலங்களும், ஆக மொத்தம் 4794.71 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

எனவே, திறந்து விடப்படும் தண்ணீரை விவசாய பெருமக்கள் குறுகியகால பயிர்களை நடவுசெய்தும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தியும் அதிகமகசூல் பெற்று பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி கௌசல்யா, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) செயற்பொறியாளர் எம்.கார்த்திகேயன், உதவி செயற்பொறியாளர் சௌந்தரம், உதவி பொறியாளர் ஜியாம் சுந்தரம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்செல்வன், எஸ்.லட்சுமணன், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**